Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழக்கிழமை, அக்டோபர் 20, 2022 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 98

# சென்னை பெருநகர காவல் ஆணையாளர், சென்னையிலுள்ள சாலைகளின் போக்குவரத்து நிலைகளை உடனே தெரிந்து கொள்ள 'ரோட் ஈசி' என்ற செல்போன் செயலியை துவக்கி வைத்தார்.

சென்னை, அக்டோபர் 20 2022: சாலைப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், சாலையைப் பயன்படுத்துபவர்களுக்கு வசதியான பயணத்தை எளிதாக்குவதற்கும் சென்னை பெருநகர போக்குவரத்துக் காவல் துறை அதிக முயற்சிகளை எடுத்து வருகிறது. போக்குவரத்து காவல் ஆளிநர்கள், ரெக்கர், ரோந்து வாகனங்கள் & மார்ஷல்கள் மற்றும் பல்வேறு போக்குவரத்து மேம்பாடுகளின் மூலம் அனைத்து முயற்சிகளும் செய்யப்படுகின்றன. மேலும், போக்குவரத்து தொடர்பான தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை முன்னணியில் உள்ளது.

நிரந்தர போக்குவரத்து மேம்பாடு, சி எம் ஆர் எல் மற்றும் மழைநீர் வடிகால் போன்ற குடிமராமத்து பணிகள் அல்லது போராட்டம் போன்ற ஒரு குறிப்பிட்ட தற்காலிக சூழ்நிலையை சமாளிக்க பல நேரங்களில் குறிப்பிட்ட சாலையை ஒரு வழி அல்லது இரு வழிகளையும் மூட வேண்டியுள்ளது. இந்த சாலை மூடப்பட்டு மாற்றுப்பாதை செய்யப்படும் போதெல்லாம், ஒரு செய்திக்குறிப்பு கொடுக்கப்பட்டு சமூக வலைதளங்களிலும் அறிவிக்கப்படுகிறது. அவ்வாறு செய்யும்போது, போக்குவரத்து தொடர்பான கூகிள் வரைபடத்தில் பின்வரும் சிரமங்கள் காணப்படுகின்றன:




1. மூடப்பட்ட சாலையை கூகிள் மேப் உடனடியாகக் காட்டாது. கூகிள் மேப்பைப் பயன்படுத்தும் சாலைப் பயனாளிகளுக்கு, வரைபடத்தில் உள்ள மூடப்பட்ட சாலை அல்லது திசைதிருப்பல் பற்றி உடனடியாகத் தெரியவராது.

2. சில நேரங்களில் போராட்டம், வாகனம் பழுது அல்லது வாகன விபத்து போன்ற திடீர் செயல்பாடுகளை கருத்தில் கொண்டு, ஒரு சாலையை உடனடியாக மூட வேண்டும் என்றால், பத்திரிகைக் குறிப்பைக் கொடுக்க நேரமிருக்காது. அதை சமூக ஊடகங்களில் தெரிவித்திருந்தாலும், சாலையைப் பயன்படுத்துபவர்கள் அதை கவனித்திருக்க மாட்டார்கள்.

மேற்கண்ட சிரமங்களைக் கருத்தில் கொண்டு பல்வேறு முறைகளை ஆராய்ந்து, மெசர்ஸ். லெப்டன் என்ற நிறுவனத்துடன் இணைந்து சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை ஒரு ஏற்பாட்டைக் கொண்டு வந்துள்ளது. அதன்படி சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை ஒரு குறிப்பிட்ட சாலையை மூடுவது மற்றும் அதன் கால அளவு குறித்து மெசர்ஸ். லெப்டன்-க்கு தெரிவிக்கும். மெசர்ஸ். லெப்டன் அதனை 'ரோட் ஈசி' என்ற செயலி மூலம் 15 நிமிடங்களுக்குள் கூகுள் மேப்பில் புள்ளியிடப்பட்ட சிவப்பு கோட்டுடன் மூடப்பட்ட சாலைகளை காண்பிக்கும். அதே நேரத்தில், மூடப்பட்ட பிறகு வாகனங்கள் செல்லக்கூடிய சிறந்த வழியையும் வரைபடம் காண்பிக்கும். மேற்கண்ட செயலியின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள் குறித்து கடந்த நான்கு நாட்களாக சோதனை செய்து, வெற்றிகரமாக நிறுவப்பட்டது. சென்னை பெருநகர காவல் ஆணையர் திரு.சங்கர் ஜிவால், இ.கா.ப., அவர்கள் காவல் ஆணையரகத்தில், சென்னையிலுள்ள சாலைகளின் போக்குவரத்து நிலைகள் குறித்து உடனுக்குடன் கூகிள் மேப்-ல் அறிவிக்கும் 'ரோட் ஈசி' செயலியை தொடங்கி வைத்தார்.





இந்த புதிய ஏற்பாடு நீண்டகால அடிப்படையில், சென்னையின் சாலை பயனாளர்களுக்கு எந்த ஒரு சாலை மூடல் மற்றும் மாற்றுப்பாதையை நிகழ்நேர அடிப்படையில் தெரிவிக்கவும், பயண நேரம் மற்றும் கிடைக்கக்கூடிய மாற்று பாதைகளை மதிப்பிடவும் பயன்படும். சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை தனது சாலைப் பயனாளர்களின் பாதுகாப்பான மற்றும் விரைவான பயணத்திற்கான தனது முயற்சிகளைத் தொடரும் என்ற வாக்குறுதியை மீண்டும் தெரியப்படுத்துகிறது.

இந்நிகழ்ச்சியில், சென்னை பெருநகர போக்குவரத்து கூடுதல் ஆணையாளர் திரு.கபில்குமார் சி. சரட்கர், இ.கா.ப., போக்குவரத்து துணை ஆணையாளர்கள் திரு.ஹர்ஷ் சிங், இ.கா.ப., (வடக்கு), திரு.சமய்சிங் மீனா, இ.கா.ப., (கிழக்கு), லெப்டன் நிறுவனத்தின் ஹெட் டேட்டா ப்ராடக்ட்ஸ் திரு.விஜய்குமார் தாட்வாலியா. காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் கலந்து கொண்டனர்.

# ஸ்டாலினை சந்தித்து பேசியதை நிரூபித்தால் அரசியலைவிட்டு விலக தயார் எடப்பாடி பழனிசாமிக்கு ஓ.பன்னீர்செல்வம் சவால்

சென்னை, அக்டோபர் 20 2022: நானும், முதலமைச்சர் ஸ்டாலினும் சந்தித்து பேசியதை நிரூபித்தால் அரசியலைவிட்டு விலக தயார் என்று எடப்பாடி பழனிசாமிக்கு ஓ.பன்னீர்செல்வம் சவால் விடுத்துள்ளார்.

அண்ணா தி.மு.க.வினர் நேற்று நடத்திய போராட்டம் தனக்கு எதிரானதாக கருதவில்லை என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவராக ஆர்.பி.உதயகுமாரின் நியமனத்தை அங்கீகரிக்க மறுத்த தமிழக சபாநாயகரை கண்டித்து சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவிருந்தனர். போராட்டத்துக்கு அனுமதி மறுத்த போலீசார், அவர்களை கைது செய்தனர். அப்போது செய்தியாளர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி, “தமிழக முதல்வர் ஆணைக்கிணங்க ஓபிஎஸ்ஸுக்கு ஆதரவாக சபாநாயகர் அப்பாவு செயல்படுகிறார். இது அநீதி. ஓ.பன்னீர்செல்வத்தை பிரீடமாக பயன்படுத்தி அண்ணா தி.மு.க.வை வீழ்த்த ஸ்டாலின் திட்டமிடுகிறார். சட்டசபை முடிந்த பின்னர் ஸ்டாலினும், ஓ.பன்னீர்செல்வமும் அரை மணி நேரம் சந்தித்துப் பேசினர். இந்த முயற்சிகள் எல்லாம் அப்பட்டமாகவே தெரிகிறது” என்று கூறியிருந்தார்.





இந்த நிலையில் சென்னை விமான நிலையத்தில் ஓ.பன்னீர்செல்வம் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவரிடம், நேற்று அண்ணா தி.மு.க.வினர் நடத்திய போராட்டம் குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினார்கள். அதற்கு அவர், அது எனக்கு எதிரான போராட்டமாக நான் கருதவில்லை என்றார்.

முதல்வருடன் அரை மணி நேரம் நீங்கள் பேசியதாக எடப்பாடி பழனிசாமி கூறியிருக்கிறாரே என்று நிருபர்கள் கேட்டனர்.

பத்திரிகையாளர்கள் அவருடைய நடவடிக்கை பற்றி கவனித்து வருகிறீர்கள். மக்களும் கணித்து வைத்திருக்கிறார்கள். நான் முதல்வரை சந்தித்து பேசியதாக கூறுவது முற்றிலும் தவறானது.

நான் தமிழக முதல்வரை சந்தித்து பேசியதை எடப்பாடி பழனிசாமி நிரூபித்தால், நான் அரசியலில் இருந்தே விலகத் தயார்; நிரூபிக்கத் தவறினால் அரசியலை விட்டு அவர் விலகத் தயாரா? என்று எடப்பாடி பழனிசாமிக்கு ஓ.பன்னீர்செல்வம் சவால் விடுத்தார்.

ஆறுமுகசாமி கமிஷன்

அறிக்கை பற்றிஞ்

ஆறுமுகசாமி கமிஷன் அறிக்கையில் சசிகலா உட்பட 4 பேர் குற்றம் செய்தவர்கள் என கூறப்பட்டுள்ளதே, இதுபற்றி உங்கள் கருத்து என்ன என்று நிருபர்கள் கேட்டனர்.

ஆணையத்தின் அறிக்கை அடிப்படையில் சிலர் நீதிமன்றம் செல்ல முயற்சி செய்து வருகிறார்கள். எனவே இதுபற்றி கருத்து சொல்ல விரும்பவில்லை என்று ஓ.பன்னீர்செல்வம் கூறினார்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

# காங்கிரஸ் கட்சி தலைவராக மல்லிகார்ஜுன கார்கே 26ந்தேதி பதவி ஏற்கிறார்



சென்னை, அக்டோபர் 20 2022: மல்லிகார்ஜுன கார்கே காங்கிரஸ் கட்சி தலைவராக 26ந்தேதி பதவி ஏற்க உள்ளார்.

நடந்து முடிந்த காங்கிரஸ் கட்சி தலைவர் தேர்தலில் பதிவான 9,385 ஓட்டுகளில் மல்லிகார்ஜுன கார்கே 7,897 ஓட்டுகள் பெற்று அமோக வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட சசி தரூருக்கு 1,072 ஓட்டுகள் மட்டும் கிடைத்தது. வருகிற 26ந்தேதி (புதன்கிழமை) மல்லிகார்ஜுன கார்கே தலைவராக பதவி ஏற்க உள்ளார்.

இந்த வெற்றியின் மூலம் கடந்த 24 ஆண்டுகளில் நேரு-காந்தி குடும்பத்தை சாராத முதல் தலைவர் என்ற புதிய சரித்திரத்தை மல்லிகார்ஜுன கார்கே படைத்துள்ளார்.

முன்னதாக நேற்று டெல்லியில் உள்ள மல்லிகார்ஜுன கார்கே வீட்டுக்கு சோனியா காந்தி, பிரியங்கா காந்தி, ராஜஸ்தான் முதலமைச்சர் அசோக் கெலாட், சசிதரூர் ஆகியோர் நேரில் சென்று மல்லிகார்ஜுன கார்கேவுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்த மல்லிகார்ஜுன கார்கே பல்வேறு கருத்துகளை பகிர்ந்து கொண்டார்.

அதில் கடந்த 24 ஆண்டுகளாக சோனியா காந்தி கட்சியை வழி நடத்தினார். அவரது தலைமையில் தான் காங்கிரஸ் கட்சி 2 முறை ஆட்சியை கைப்பற்றியது. அதற்காக தொண்டர்கள் சார்பில் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

தலைவர் தேர்தலில் எனக்கு எதிராக போட்டியிட்ட சசி தரூருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். சசி தரூரை நான் நேரில் சந்தித்தேன். கட்சியை வலுப்படுத்துவது குறித்தும், கட்சியை முன்னேற்றப்பாதையில் எடுத்துச்செல்வது குறித்தும் அவருடன் ஆலோசனை நடத்தினேன் என கூறி உள்ளார்.

மேலும் கூறும்போது, காங்கிரஸ் கட்சியில் வயது பாகுபாடு இல்லை. அனைவரும் காங்கிரஸ் கட்சியின் தொண்டர்களாக இணைந்து கட்சிக்காக உழைக்க வேண்டும். ஜனநாயகத்திற்கு எதிரான பாசிச மற்றும் வகுப்புவாத அரசியலுக்கு எதிராக, ஒற்றுமையோடு நாம் இணைந்து போராட வேண்டும் என கட்சி தொண்டர்களுக்கு காங்கிரஸ் கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார்.

பிரதமர் மோடி வாழ்த்து

காங்கிரஸ் தலைவராக தேர்வாகி உள்ள மல்லிகார்ஜுன கார்கேவுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். அவர் டுவிட்டரில் வெளியிட்ட பதிவில், "காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற புதிய பொறுப்பினை ஏற்கும் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு எனது நல்வாழ்த்துக்கள். வரவுள்ள உங்கள் பதவிக்காலம், பயனுள்ளதாக அமையட்டும்" என கூறியுள்ளார்.

ராகுல் காந்தி

ராகுல் காந்தி தனது வாழ்த்துச்செய்தியில், "காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மல்லிகார்ஜுன கார்கேவுக்கு வாழ்த்துக்கள். அவர், இந்தியாவுக்கான ஜனநாயக பார்வையை பிரதிநிதித்துவப்படுத்துகிறார். அவரது பரந்த அனுபவமும், சித்தாந்த உறுதிப்பாடும் கட்சிக்கு நன்றாக பயன்படும்" என தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:-

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மல்லிகார்ஜுன கார்கேவுக்கு எனது இதயப்பூர்வமான வாழ்த்துகள்.

இந்தியாவின் மதச்சார்பற்ற - அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய பண்புகளை காக்க நாம் அனைவரும் போராடி வரும் இந்த முக்கிய தருணத்தில் நாட்டின் பழம்பெரும் கட்சியின் தலைமைப் பொறுப்புக்கு கார்கே தேர்வாகி உள்ளார்.தமது புதிய பொறுப்பில் அவர் வெற்றி காண வாழ்த்துகிறேன்!

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஆம்புலன்ஸ் வாகனங்களுக்கு வழிவிட தவறினால் ரூ.10 ஆயிரம் அபராதம்



சென்னை, அக்டோபர் 20 2022: தமிழகத்தில் உள்ள சாலைகளில் ஆம்புலன்ஸ் மற்றும் தீயணைப்பு வாகனத்திற்கு வழிவிட தவறினால் ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும் என்று தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

மத்திய அரசின் மோட்டார் வாகன சட்டத் திருத்தத்தின் அடிப்படையில் தமிழக அரசு புதிய அரசாணையை வெளியிட்டுள்ளது.

அதில் கூறியிருப்பதாவது:-

அதில், " ஆம்புலன்ஸ், தீயணைப்பு வாகனங்கள் உள்ளிட்ட உயிர்காக்கும் வாகனங்கள் சாலைகளில் செல்லும்போது, வழிவிட தவறினால், அதற்கு இடையூறாக செயல்பட்டால் சம்பந்தப்பட்டவர்களுக்கு ரூ.10 ஆயிரம் அபராதமாக விதிக்கப்படும்.

சாலைகளில் வாகனங்களை அதிவேகமாக ஓட்டி, மக்களுக்கு இடையூறு ஏற்படுத்துதல், பைக் ரேசில் ஈடுபடுதல் போன்ற செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு ஏற்கெனவே விதிக்கப்பட்டு வந்த ரூ.5 ஆயிரம், ரூ.10 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது.

அபாயகரமான விபத்துகளை ஏற்படுத்தும் வகையில் வாகனத்தை ஓட்டுதல், மாசு ஏற்படுத்தும் வாகனங்கள், தடை செய்யப்பட்ட இடங்களில் தேவையற்ற ஒலி எழுப்பும் ஹாரன்களை பயன்படுத்தினாலும் ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும்.

வாகனத்திற்கு வெளியே சரக்குகள், கம்பிகள் இருந்தால் ரூ.20 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும்.

சாலை விபத்துகளைத் தடுக்கும் வகையில் ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருந்த அபராதத் தொகைகளை உயர்த்தி இந்தப் புதிய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

# மியான்மர் சிறையில் குண்டு வெடிப்பு: 8 பேர் பலி



சென்னை, அக்டோபர் 20 2022: மியான்மர் நாட்டின் சிறைச்சாலையில் வெடிகுண்டு வெடித்ததில் 8 கைதிகள் பலியானார்கள்.

மியான்மர் நாட்டில், ஆங் சான் சூகி தலைமையிலான கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைத்திருந்தது. ஆனால், கடந்த ஆண்டு ராணுவம் ஆட்சியை கைப்பற்றியதால் தற்போது ராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது.

8 பேர் பலி

இந்நிலையில், அந்நாட்டின் யாங்கோன் நகரில் அமைந்துள்ள சிறைச்சாலையில் நேற்று கண்காணிப்பு அலுவலகம் முன் திடீரென வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் 10 வயது சிறுமி, பார்வையாளர்கள், சிறைக் காவலர்கள் என மொத்தம் 8 பேர் பலியானதோடு 18 பேர் படுகாயம் அடைந்தனர். இத்தாக்குதலுக்கு அரசுக்கு எதிராக செயல்படும் குழு ஒன்று பொறுப்பேற்றுள்ளது.

# அண்ணா பல்கலைக்கழகம் ரூ.77 கோடி முறைகேடு தணிக்கைத்துறை அறிக்கையில் அதிர்ச்சி தகவல்




சென்னை, அக்டோபர் 20 2022: அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் பதிவேடுகள் டிஜிட்டல் மயமாக்குவது மற்றும் வெற்றுச் சான்றிதழ் அச்சடிப்பதில் ரூ.77 கோடி முறைகேடு நடந்துள்ளதாக தணிக்கைத்துறை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தணிக்கைத்துறை அறிக்கையில், 2016-ம் ஆண்டு, அண்ணா பல்கலைக்கழக மாணவர்களின் பட்டப்படிப்பு சான்றிதழ்கள், தரவரிசை சான்றிதழ்கள் ஆகியவற்றை டிஜிட்டல் மயமாக்க, ஜி.எஸ்.டி லிமிடெட், மேட்ரிக்ஸ் இன்க் ஆகிய 2 நிறுவனங்களுடன் ரூ.11.41 கோடியில் ஒப்பந்தம் செய்யப்பட்டதாகவும், பதிவாளர் மற்றும் கொள்முதல் குழுவால் செய்யப்பட வேண்டிய ஒப்பந்தத்தை, தேர்வு கட்டுப்பாட்டாளரே செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் வழங்கலில் ஏல மோசடி செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும் 7 லட்சத்து 33 ஆயிரத்து 722 பதிவுகள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டநிலையில், 20 லட்சத்து 92 ஆயிரத்து 722 பதிவுகள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டதற்காக ஜி.எஸ்.டி லிமிட்டெட் நிறுவனத்திற்கு பணம் வழங்கப்பட்டது எனவும் செய்யாத பணிக்காக, மேட்ரிக்ஸ் இன்க் நிறுவனத்திற்கும் பணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல் வெற்றுச் சான்றிதழ்களை அச்சிடுவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட ஐ.எப்.எப் லிமிடெட் நிறுவனம், ஜி.எஸ்.டி லிமிடெட் நிறுவனத்தின் சகோதர நிறுவனம் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள தணிக்கைத்துறை அறிக்கை, அந்த நிறுவனம் ரூ.57.14 கோடி மதிப்பில் அதிகளவிலான வெற்றுச் சான்றிதழ்களை கொள்முதல் செய்துள்ளதாகவும் இதில், சான்றிதழின் வடிவத்தை மாற்றியதால், ரூ.24.50 கோடி மதிப்பிலான சான்றிதழ்கள் பயன்படுத்த முடியாததாகிவிட்டது எனவும் கூறப்பட்டுள்ளது.

டிஜிட்டல் மயமாக்கல், வெற்று சான்றிதழ்களை அச்சடிப்பது ஆகியவற்றில் ரூ.77 கோடி முறைகேடு நடந்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொடர் கனமழையால் மிதக்கும் பெங்களூருவிற்கு மஞ்சள் அலர்ட்



சென்னை, அக்டோபர் 20 2022: தொடர் கனமழை காரணமாக, பெங்களூரு மாநகருக்கு வானிலை ஆய்வு மையம், மஞ்சள் அலர்ட் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கர்நாடக மாநிலம் பெங்களூருவில் இரவு 8 மணி முதல் நள்ளிரவு வரை கனமழை வெளுத்து வாங்கி விட்டது. இதனால் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என மாநகரின் நாலாபுறமும் உள்ள சாலைகளில் மழைநீர் தேங்கியது. இதனால் வாகன ஓட்டிகள் பெரும் அவதிக்கு ஆளாகினர். கடந்த சில வாரங்களுக்கு முன்பு பெய்த தொடர் மழையால் பெங்களூரு தள்ளாடிய நிலையில், அதிலிருந்து பாடம் கற்பதற்குள் மீண்டும் ஒரு மழை புரட்டி போட்டுள்ளது.

மஞ்சள் அலெர்ட்

கனமழையை தொடர்ந்து அனைத்து ஐடி நிறுவனங்கள், தங்களது ஊழியர்களை வீட்டிலிருந்தே பணிபுரியுமாறு அறிவுறுத்தியுள்ளது. ஏனெனில் சர்வதேச ஐடி நிறுவனங்கள், ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் ஆகியவை அமைந்துள்ள இடங்கள் அனைத்தும் நீரில் தத்தளிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதில் குடியிருப்புகளும் விதிவிலக்கல்ல.

கடந்த முறையை போலவே மீட்பு பணிகளில் டிராக்டர்கள் ஈடுபடுத்தப்பட்டன. அலுவலகங்கள், குடியிருப்புகளில் இருந்து பொதுமக்கள் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர். இதற்கிடையில் வானிலை ஆய்வு மையமானது மஞ்சள் அலர்ட் விடுத்துள்ளது. இதனால் பள்ளி, கல்லூரிகள் மூடப்பட்டு, ஊழியர்கள் முடிந்த வரை வீட்டிலிருந்தே பணிபுரிய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2017ஆம் ஆண்டு பெங்களூருவில் அதிகபட்சமாக 170 சென்டி மீட்டர் மழை பெய்திருந்தது. நடப்பாண்டு, பருவமழை தொடங்கியதில் இருந்து தற்போது வரை மட்டுமே 170 சென்டி மீட்டரை கடந்து மழை பெய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# மோடியிடமிருந்து விருது பெற்றார் அன்பரசன்



சென்னை, அக்டோபர் 20 2022: ஒன்றிய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறையின் மூலம் செயல்படுத்தப்படும் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தில் சிறப்பாக செயல்பட்டமைக்கு தேசிய அளவில் 3-ம் இடம் பிடித்த தமிழ்நாட்டிற்கு, குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் நேற்று (19-ந் தேதி) நடைபெற்ற விழாவில் பிரதமரிடமிருந்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் விருதினை பெற்றார்.

பிரதமரின் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தை (நகர்ப்புறம் ) சிறப்பாக செயல்படுத்தும் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பயனாளிகள் அங்கீகரிப்பதற்காக ஒன்றிய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற துறையால், " பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா விருதுகள் ஞ் 2021 மற்றும் 150 நாட்கள் சவால்கள் " என்ற அடிப்படையில், மாநிலம், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கான விருதுகளும், சிறப்பு பிரிவு விருதுகளும், பயனாளிகளுக்கான விருதுகள் என மூன்று பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த விருதுகளில் சிறப்பாக செயல்பட்ட மாநிலம் என்ற பிரிவில் தமிழகம் 3-வது இடத்தையும், மாநகராட்சிகளில் மதுரை மாநகராட்சிக்கு 3-வது இடமும், பேரூராட்சிகள் பிரிவில் கோவை மாவட்டம், பெரிய நெகமம் பேரூராட்சிக்கு 5ஞுவது இடமும் பிடித்து விருதுகள் பெற்றுள்ளன.

இம்மாநாட்டில் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அன்பரசனுடன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை முதன்மை செயலாளர் ஹிதேஷ்குமார் மக்வானா, வாரிய மேலாண்மை இயக்குநர் ம.கோவிந்தராவ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பணம் செலுத்தாமலே ரெயிலில் டிக்கெட் முன்பதிவு: ரெயில்வே திட்டம்



சென்னை, அக்டோபர் 20 2022: ரெயில்வே டிக்கெட் முன்பதிவு செய்யும் போது பணமே செலுத்தாமல் முன்பதிவு செய்யும் திட்டத்தை விரைவில் ஐஆர்சிடிசி அறிவிக்க உள்ளது.

பல்வேறு ஆன்லைன் வர்த்தகங்கள் தற்போது எல்லாம் "Buy Now Pay Later" என்ற திட்டம் மூலம், பொருள்களை தேவைப்படும் போது வாங்கிக்கொண்டு, பின்னர் ஒரு மாதம் கழித்து பணத்தை கட்டி கொள்ளலாம் என்ற திட்டத்தை அமல்படுத்தி வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. இதற்கு எந்த வித கூடுதல் கட்டணமும் வசூலிக்கப்படுவது இல்லை.

ரெயில்வேயில் நடைமுறை

இதே முறையை தற்போது ஐஆர்சிடிசி, ரெயில் டிக்கெட்டில் அறிமுகப்படுத்த உள்ளது. அதாவது, ஐஆர்சிடிசி கேஷ்-இ என்ற நிறுவனத்துடன் இணைந்து "இப்போது பயணம் செய்யுங்கள்- பின்பு பணம் செலுத்துங்கள்" என்ற திட்டத்தை செயல்படுத்த உள்ளது. பயணிகள் முன்பதிவு செய்யும் போது, அவர்களுக்கான பணத்தை கேஷ்-இ நிறுவனம் செலுத்தி விடும். அதன் பின் ஒரு குறிப்பிட்ட நாளுக்கு பிறகு, பயணிகளிடம் இருந்து இ.எம்.ஐ வசதி அல்லது தவணை முறை மூலம் பணத்தை வசூல் செய்து கொள்ளும். இதற்கு எந்த வித கூடுதல் கட்டணமும் வசூலிக்கப்படாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
வியாழக்கிழமை,
அக்டோபர் 20, 2022

# ஜியோ ஸ்டுடியோஸ் மற்றும் தினேஷ் விஜன் வழங்கும் இந்தியாவின் மிகப்பெரிய இயற்கை சாகச நகைச்சுவை திரைப்படமான "பெடியா" டிரைலர் வெளியீடு




சென்னை, அக்டோபர் 20 2022: பிரபல பாலிவுட் நடிகர் வருண் தவான் நடிக்கும் பான்-இந்திய திரைப்படமான 'பெடியா' டிரைலர் பற்றிய அறிவிப்பு மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்திய நிலையில், இப்போது படத்தின் டிரைலர் இந்த எதிர்பார்ப்பை மேலும் அதிகப்படுத்தியுள்ளது. பாலிவுட்டில் வருண் தவானின் 10-வது ஆண்டை கொண்டாடும் விதமாக பெடியா டிரைலரை ஜியோ ஸ்டுடியோஸ் மற்றும் தினேஷ் விஜன் தமிழ், இந்தி மற்றும் தெலுங்கு ஆகிய மொழிகளில் வெளியிட்டுள்ளனர். அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள ரம்மியமான காடுகளில் படமாக்கப்பட்ட இந்த படத்தில் வருண் தவானுடன் கீர்த்தி ஷெட்டி நடித்துள்ளார். புராண கதைகளில் வரும் ஓநாய் (பெடியா) ஒன்றினால் கடிப்பட்டு ஓநாய் மனிதனாக மாறிய பாஸ்கர் என்பவரை பற்றிய கதை இது. இந்த நிலைமைக்கு தீர்வு காண்பதற்கான பாஸ்கர் மற்றும் அவரது நண்பர்களின் தேடலில் பல திருப்பங்கள் நிறைந்திருக்கின்றன. ஓநாய் மனிதனாக வருண் தவான் செய்யும் விஷயங்கள் சுவாரஸ்யமான முறையில் இந்த டிரைலரில் இடம்பெற்றுள்ளன. டிரைலரில் வருண், கீர்த்தி, தீபக் தோப்ரியல் மற்றும் அபிஷேக் பேனர்ஜீ இடையேயான காட்சிகள் ரசிக்கும்படியாக உள்ளன.

தினேஷ் விஜன் தயாரிப்பில் பிரமாண்டமான கிராபிக்ஸ் காட்சிகள் மற்றும் புதிய கதைக்களம் கொண்ட இந்த படத்திற்கு ஏற்கனவே மிகுந்த எதிர்பார்ப்பு உள்ளது.

டாப் கன் மேவ்ரிக், மோர்ட்டல் காம்பாட், காட்ஜில்லா ஃஷிவ காங், மற்றும் ஆட் அஸ்திரா ஆகிய படங்களுக்கு கிராபிக்ஸ் செய்த விருது பெற்ற நிறுவனமான எம்பிசி இந்த படத்திற்கு கிராபிக்ஸ் பணிகளை செய்துள்ளது. டிரைலரை பற்றி இயக்குநர் அமர் கௌஷிக் கூறுகையில், "படத்தில் இடம்பெறும் சுவாரசியமான நிகழ்வுகளுக்கு ஒரு முன்னோட்டமாக இது இருக்கும். திரையரங்குளில் பார்த்து ரசிப்பதற்காக எடுக்கப்பட்ட படம் தான் பெடியா. இப்படம் ரசிகர்களை கட்டாயம் மகிழ்விக்கும் என்கிற நம்பிக்கை எனக்கிருக்கிறது," என்றார். தயாரிப்பாளர் தினேஷ் விஜன் கூறுகையில், "குறைந்த காலத்தில் உலகத்தரம் வாய்ந்த ஒரு படத்தை தருவதற்காக மேடாக் எடுத்து கொண்ட முயற்சியே பெடியா. தரமான கிராபிக்ஸ் காட்சிகளோடு உருவாகியுள்ள இப்படத்தை குடும்பத்துடன் கொண்டாட்டமாக ரசிக்கலாம். அனைத்து தலைமுறையினரையும் கவரும் ஒரு சினிமா அனுபவமாக இது இருக்கும். மிகுந்த திறைமைசாலியான் அமர் கௌஷிக் இந்தப் படத்தை இயக்கியுள்ளார். காமெடி மற்றும் திகில் நிறைந்த, இந்தியாவின் முதல் ஓநாய் மனிதனின் சாகசங்கள் குறித்த படமாக இது உருவாகியுள்ளது," என்றார். பத்லாபூர் படத்தின் வெற்றிக்கு பிறகு வருண் மற்றும் தினேஷ் இணையும் படம் 'பெடியா' என்பதால் மிகுந்த எதிர்பார்ப்பு உள்ளது.

'ஸ்ரீ' மற்றும் 'பாலா' படங்களுக்கு பிறகு ஜியோ ஸ்டுடியோஸ் மற்றும் மேடாக் பிலிம்ஸ் தயாரிப்பில் இது அமர் கௌஷிக்கின் மூன்றாவது படமாகும்.

படம் முழுவதும் சிரிப்பு மற்றும் திகில் கலந்த பயணமாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பை டிரைலர் ஏற்படுத்தியுள்ளது. ஜியோ ஸ்டுடியோஸ் மற்றும் தினேஷ் விஜன் வழங்கும், மேடாக் பிலிம்ஸ் தயாரிப்பில், வருண் தவான், கீர்த்தி ஷெட்டி, தீபக் தோப்ரியால் மற்றும் அபிஷேக் பேனர்ஜீ நடித்துள்ள பெடியா நவம்பர் 25 அன்று தமிழ், ஹிந்தி மற்றும் தெலுங்கு ஆகிய மொழிகளில் பான்-இந்தியா படமாக வெளியாகவுள்ளது.

# தீபாவளி ரேஸில் முந்துகிறது சர்தார்




சென்னை, அக்டோபர் 20 2022: தமிழ்த் திரையுலகில் ரசிகர்களின் ரசனைக்கு விருந்தளிக்கும் விதமாக வித்தியாசமான கதைக்களத்தில் நூறு சதவீத பொழுதுபோக்கு அம்சம் கொண்ட படங்களை பிரின்ஸ் பிக்சர்ஸ் நிறுவனம் சார்பில் தயாரித்து வருபவர் தயாரிப்பாளர் லக்ஷ்மண் குமார். கமர்ஷியல் படங்களுக்கு என்றுமே ரசிகர்களிடம் வரவேற்பு குறைந்ததில்லை... என்ன ஒன்று, அதை ரசிகர்களின் பல்ஸ் அறிந்து கொடுக்க வேண்டும்.. அவ்வளவுதான்.. தங்களது தயாரிப்பில் உருவாகி தீபாவளி ரிலீஸாக நாளை (அக்-21) வெளியாகும் சர்தார் படத்தை அப்படி ஒரு புல் மீல்ஸ் ஆக ரசிகர்களுக்கு வழங்கத் தயாராக இருக்கிறது பிரின்ஸ் பிக்சர்ஸ். கார்த்தியின் டபுள் ஆக்சன், ராஷி கண்ணா, ரஜிஷா விஜயனின் கலர்புல் காம்போ, இருக்கையில் அமர்ந்ததுமே ரசிகர்களை கதையோட்டத்திற்குள் இழுத்து செல்லும். ஜி.வி பிரகாஷின் இசை என ரசிகர்களின் முழு திருப்திக்கு நான் கியாரண்டி என்கிறார் இயக்குநர் பி.எஸ்.மித்ரன். அறிவிப்பு வெளியான நாளில் இருந்தே சர்தார் படத்திற்கான எதிர்பார்ப்பு லெவல் எகிறியதால் இந்தப் படத்தின் வியாபாரத்திலும் அது பெரிய அளவில் எதிரொலித்துள்ளது.. குறிப்பாக அதிக அளவிலான திரையரங்குகள் இந்தப் படத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் தீபாவளி ரேஸில் சர்தார் முன்னிலையில் இருக்கிறது. அழகான தரமான எண்டெர்டெய்ன்மெண்ட் படங்களைத் தொடர்ச்சியாக மக்களின் பார்வைக்கு தந்து வரும் பிரின்ஸ் பிக்சர்ஸ், அடுத்தடுத்து முன்னணி இயக்குநர்களுடன் கைகோர்த்து இன்னும் பிரமிப்பூட்டும் படைப்புகளைத் தர இருக்கிறது என்கிறார் தயாரிப்பாளர் லக்ஷ்மண் குமார்.

# ஃப்ளெக்ஸி ஃப்யூவல் ஸ்ட்ராங் ஹைபிரிட் வாகன தொழிநுட்ப பைலட் திட்டம் டொயோட்டா நிறுவனம் அறிமுகம்




சென்னை, அக்டோபர் 20 2022: டொயோட்டா நிறுவனம் சமீபத்தில் டெல்லியில் ஃப்ளெக்ஸி ஃப்யூவல் ஸ்ட்ராங் ஹைபிரிட் வாகன தொழில்நுட்ப என்ற பைலட் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.இந்நிகழ்ச்சி மாண்புமிகு திரு. நிதின் ஜெய்ராம் கட்கரி, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், இதர முக்கிய அரசுப் பிரமுகர்கள், உயர்மட்ட அரசு அதிகாரிகள், தொழில் அதிபர்கள், கல்வியாளர்கள் மற்றும் டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டாரின் மூத்த நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த முன்முயற்சியானது, எத்தனால் ஒரு முக்கியமான உள்நாட்டு, கார்பன் நியூட்ரல் எரிசக்தி பாதையாக, இந்தியாவிற்கு உண்மையான தன்னம்பிக்கையை அடைய உதவும் மேம்பட்ட ஸ்ட்ராங் ஹைப்ரிட் எலக்ட்ரிக் வாகனத் தொழில்நுட்பத்துடன், எத்தனால் பற்றிய விழிப்புணர்வை ஊக்குவிக்கும் முதல் படியைக் குறிக்கிறது. மேலும் 2070க்குள் கார்பன் நெட்-ஜீரோவின் தேசிய இலக்கை அடைய பங்களிப்பதை நோக்கமாக கொன்டுள்ளது.

# உடன் பயணிப்பவர்கள் மீதும் வழக்குப் பதிவு ரூ. 10 ஆயிரம் அபராதம்




சென்னை, அக்டோபர் 20 2022: குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களுடன் சேர்த்து பயணிப்பவர்கள் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டு தலா ரூ. 10 ஆயிரம் அபராதம் விதிக்கும் புதிய போக்குவரத்து விதி உடனடியாக அமலுக்கு வந்துள்ளது என்று சென்னை போக்குவரத்து காவல்துறை அறிவித்துள்ளது.

இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான சாலை விபத்து மரணங்கள் தமிழகத்தில் தான் நடப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக கடந்தாண்டு மட்டும் தமிழகத்தில் 11,419 இறப்புகள் நிகழ்ந்துள்ளதாக தேசிய குற்ற ஆவண காப்பகம் தெரிவித்துள்ளது.

சென்னையில் மட்டும் 1026 பேர் சாலை விபத்தில் சிக்கி பலியாகி உள்ளனர். சாலை விபத்துகளை குறைக்க போக்குவரத்து போலீசார் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளிலும் புது திட்டத்தையும் அமல்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில் குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களுடன் சேர்ந்து பயணிப்பவர்கள் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்படும் என சென்னை போக்குவரத்து காவல்துறை அறிவித்துள்ளது.

மேலும், டிரைவர் குடிபோதையில் இருந்தால், அவர்களுடன் பயணிப்பேர் குடிபோதையில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் வழக்குப்பதிவு செய்யப்பட்டு தலா ரூ. 10 ஆயிரம் அபராதம் வசூல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய போக்குவரத்து விதி இன்று முதல் அமலுக்கு வருவதாகவும் சென்னை போக்குவரத்து காவல்துறை தெரிவித்துள்ளது.

# துன்புறுத்தல், நேர்மை மீறலில் ஈடுபட்டால் வேலை இழக்க நேரிடும்: விப்ரோ தலைவர் ரிஷாத் பிரேம்ஜி எச்சரிக்கை



சென்னை, அக்டோபர் 20 2022: எந்தவிதமான நேர்மை மீறல் அல்லது துன்புறுத்தலுக்கு விப்ரோ நிறுவனம் எதிரானது என்றும், இரண்டில் ஏதேனும் ஒன்றை மீறினால், ஊழியர் தனது வேலையை இழக்க நேரிடும் என்றும் விப்ரோ தலைவர் ரிஷாத் பிரேம்ஜி எச்சரித்துள்ளார்.

விப்ரோ நிறுவனம் நூற்றுக்கணக்கான ஊழியர்களை பணிநீக்கம் செய்ததாக தகவல் வெளியான சில வாரங்களுக்குப் பிறகு, அதன் தலைவர் ரிஷாத் பிரேம்ஜி ஒரு பொது மேடையில் இந்த அதிர்ச்சியூட்டும் தகவலை வெளியிட்டார்.

பெங்களூரில் நேற்று நடந்த நாஸ்காம் தயாரிப்பு மாநாட்டில் பேசிய விப்ரோ சாப்ட்வேர் சர்வீசஸ் நிறுவனத்தின் தலைவர் ரிஷாத் பிரேம்ஜி பேசியதாவது:-

மூத்த தலைவர் டிஸ்மிஸ்

'எனது நிறுவனத்தில் முதல் 20 தலைவர்களில் ஒருவராக இருந்தவரை, "ஒருமைப்பாடு மீறல்" கண்டறியப்பட்ட 10 நிமிடங்களில் பணி நீக்கம் செய்யும் முடிவை எடுத்தோம். அந்த நபர் நிறுவனத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியவர். ஆனால் அவர் நேர்மை தவறியது நிரூபணம் ஆனதால் அந்த கடினமான முடிவை மேற்கொள்ள வேண்டியிருந்தது என்று கூறினார்.

அந்த மூத்த ஊழியர் ஒரே நேரத்தில் இரு நிறுவனங்களில் பணியாற்றும் 'மூன் லைட்டிங்' (Moon Lighting) செய்தாரா? அல்லது வேறு ஏதேனும் முறைகேட்டில் ஈடுபட்டாரா? என்பது குறித்த தகவலை பிரேம்ஜி தெரிவிக்கவில்லை. நிகழ்வின் முடிவில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கும் ரிஷாத் பிரேம்ஜி பதிலளிக்காமல் கடந்து சென்றதால் டிஸ்மிஸ் ஆக்கும் அளவுக்கு அந்த மூத்த ஊழியர் செய்த நேர்மை மீறல் என்ன என்பது குறித்து தகவல் வெளியாகவில்லை.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# ஆஸ்திரேலியா, மண்டல சிவில் கடல்சார் பாதுகாப்பில் தனது அர்ப்பணிப்பை உறுதி செய்யும் வகையில் நடவடிக்கைகளை மேம்படுத்துகிறது!




சென்னை, அக்டோபர் 20 2022: சிவில் கடல்சார் பாதுகாப்பிற்கான ஆஸ்திரேலியாவின் உறுதியான அர்ப்பணிப்பை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தி இருக்கிறது. ஆஸ்திரேலியாவின் கடல் எல்லைக் கட்டளை கமாண்டர்/கமாண்டர் ஜாயின்ட் ஏஜென்சி டாஸ்க் ஃபோர்ஸ், இறையாண்மை செயல் எல்லைப் பிரிவு அதிகாரி, ராயல் ஆஸ்திரேலியன் நேவி ரியர் அட்மிரல் ஜஸ்டின் ஜோன்ஸ்-சின் இந்திய வருகையின் மூலம் ஆஸ்திரேலியாவின் கடல்சார் பாதுகாப்பு உறுதிப்பாடு மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த பயணத்தின் போது, அக்டோபர் 14 முதல் 20 வரை, ரியர் அட்மிரல் ஜோன்ஸ், டெல்லியில் நடந்த ஆசிய கடலோர காவல் படை அமைப்புகளின் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்றார். சிவில் கடல்சார் பாதுகாப்பில் இந்த மண்டலத்தில் உள்ள நாடுகளுடன் இணைந்து பணியாற்றுவது குறித்து இதில் விவாதிக்கப்பட்டது.

ஆஸ்திரேலியாவின் உத்தி சார் கூட்டு நாடுகளுடனான பிரதிநிதிகளுடனான சந்திப்புகள் இத்தகைய உறவுகளின் வலிமையையும், தொடர்ந்து பேச்சு நடத்துதல் மற்றும் தகவல் பகிர்வுக்கான திறனையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தன.

"ஆசிய கடலோர காவல் படை அமைப்புகளின் தலைவர்கள் கூட்டத்தின் மூலமாக, ஆஸ்திரேலியா, ஆசிய பிராந்தியத்தில் உள்ள அனைத்து முக்கிய கடலோர காவல் முகமைகளுடன் நீண்டகால உறவுகளை ஏற்படுத்தி அதை வலுப்படுத்தவும் சிவில் கடல்சார் பாதுகாப்பு விஷயங்களில் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது" என்று ரியர் அட்மிரல் ஜோன்ஸ் கூறினார். "சட்டபூர்வமான வர்த்தகம் மற்றும் பயணத்தை எளிதாக்குவதற்கும், கடல்சார் குற்றங்களைத் தடுப்பதில் ஒத்துழைப்பை அதிகரிக்கவும் உதவும் வகையிலான நல்லுறவுகளை ஆஸ்திரேலியா எவ்வாறு மதிக்கிறது என்பதை இந்த பயணம் எடுத்துக்காட்டுகிறது." என்று அவர் தெரிவித்தார்.

"கடலில் நடைபெறும் குற்றங்களை எதிர்த்துப் போராடி அவற்றைத் தடுப்பதற்கு இந்த மண்டலத்தில் உள்ள அனைத்து கூட்டு செயல்பாட்டு நாடுகளுடன் நெருக்கமாக பணியாற்றுவதற்கு ஆஸ்திரேலியா உறுதிபூண்டுள்ளது. ஆள் கடத்தல் மூலமாக பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பற்றியும் அவர்களது வாழ்க்கை மற்றும் அவர்களது நலனிலும் கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு, எந்த அக்கறையும் இல்லை. இது போன்ற குற்றங்களைத் தடுப்பதில் ஆஸ்திரேலியா அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது" என்றும் அவர் கூறினார்.

ஆஸ்திரேலியா சமீபகாலமாக சிவில் கடல்சார் பாதுகாப்பில் இலங்கையுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. இந்த ஆண்டு கடல்வழி ஆட்கள் கடத்தல் (மனிதக் கடத்தல்) முயற்சிகளைத் தடுக்க இலங்கை கடற்படை அயராது உழைத்ததால் கடத்தல் மூலமாக ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய முயன்ற 183 பேரை ஆஸ்திரேலியா பாதுகாப்பாக திருப்பி அனுப்பியுள்ளது. ஆஸ்திரேலியாவில் அரசு அண்மையில் மாறியிருந்தாலும், ஆள் மற்றும் மக்கள் கடத்தலுக்கு எதிரான ஆஸ்திரேலியாவின் வலுவான கொள்கைகளில் எந்த மாற்றமும் இல்லை.

"ஆஸ்திரேலியாவை சட்ட விரோதமாக கடல்வழியாக அடைய விரும்பும் கப்பல்களை நாங்கள் தடுத்து நிறுத்துகிறோம். மேலும் கப்பலில் உள்ளவர்களை அவர்கள் புறப்படும் இடம் அல்லது சொந்த நாட்டிற்குப் பாதுகாப்பாக திருப்பி அனுப்புகிறோம். தேவைப்பட்டால், அவர்களை மண்டல செயலாக்க நாட்டிற்கு அனுப்பி வைப்போம்" என்று ரியர் அட்மிரல் ஜோன்ஸ் கூறினார்.

“சமீபத்தில் கேரளாவில் இருந்து படகு மூலமாகச் சட்டவிரோதமாக இடம்பெயர முயன்ற பலர் கைது செய்யப்பட்டதை நாங்கள் அறிவோம். நபர்களை கடத்தும் குற்றவியல் வர்த்தகத்தை தடுப்பதற்கான மிக முக்கிய நடவடிக்கையை எடுத்ததற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நான் பாராட்டுகிறேன்.” என்றும் அவர் தெரிவித்தார்.

"இந்த மண்டலம் எதிர்கொள்ளும் இந்த வகையான கடல்சார் பாதுகாப்பு சவால்களில் எங்கள் நட்பு நாடுகளுடன் ஆழமான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்பதில் நான் உறுதியுடன் இருக்கிறேன்." என்று ஆஸ்திரேலிய ராயல் நேவியின் ரியர் அட்மிரல் ஜோன்ஸ் கூறினார்.

# தனிஷ்க் வழங்கும் தந்தேராஸ் சலுகை மூலம் பண்டிகைக் கால மகிழ்ச்சியை வீட்டிற்கு கொண்டு வாருங்கள்!

## தங்க நகைகளின் செய்கூலி மற்றும் வைர நகைகளின் மதிப்பில் 20 சதவீதம் வரை தள்ளுபடி

சென்னை, அக்டோபர் 20 2022: டாடா குழுமத்தைச் சேர்ந்த இந்தியாவின் மிகப்பெரிய நகை விற்பனை பிராண்டான தனிஷ்க் பண்டிகைக் காலத்தை மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் கொண்டாட ஒரு அற்புதமான சலுகையை அறிவித்துள்ளது. வாடிக்கையாளர்கள் இப்போது தங்க நகைகளின் செய்கூலி மற்றும் வைர நகைகளின் மதிப்பில் 20 சதவீதம் வரை தள்ளுபடியைப் பெறும் வகையில் சலுகைகளை தனிஷ்க் அறிவித்துள்ளது. பண்டிகைக் காலத்தை தனிஷ்க் உடன் கொண்டாடுவதுடன் இந்த சலுகைகள் மூலம் வீட்டிற்கு செழிப்பையும் மகிழ்ச்சியையும் கொண்டு செல்லலாம். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே இந்த சலுகை அமலில் இருக்கும். சலுகைகள் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு, உங்களுக்கு அருகிலுள்ள தனிஷ்க் விற்பனை நிலையத்தைத் தொடர்பு கொள்ளலாம் அல்லது www.tanishq.co.in என்ற இணையதளத்தை பார்வையிடலாம்.

விழாக்கள் உற்சாகத்துடனும், பிரம்மாண்டத்துடனும் கொண்டாடப்பட வேண்டும். தனிஷ்க்-கின் பிரத்யேக பண்டிகைக்கால நகைத் தொகுப்பான ‘அலேக்யா’ தொகுப்பு, பண்டிகைக் கொண்டாட்டத்தில் உங்களை திளைக்க வைப்பதை உறுதி செய்கிறது. மிகவும் குறிப்பிடத்தக்க மினியேச்சர் மற்றும் பிச்வாய் ஓவியங்களை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப் பெற்ற அற்புதமான ‘அலேக்யா’ தொகுப்பு, பழமையான, செழுமையான இந்திய கலை வடிவங்களின் அழகை நினைவூட்டுகிறது.

பிரமிக்க வைக்கும் பண்டிகைக் கால நகைத் தொகுப்பு, அரசர் காலத்தில் பிரமிக்க வைத்த ராஜ நகைச் சிறப்பை பிரதிபலிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்திய ஓவியங்களின் தன்மையையும் இது காட்டுகிறது. இந்த ஆண்டு, தனிஷ்கின் பண்டிகைத் தொகுப்பு, பழங்கால கலை வடிவத்தைப் போலவே நுணுக்கமான கைவினைத்திறன் மற்றும் துல்லியமான அழகியலை வெளிப்படுத்தும் வகையான ஒன்றாகும். அலேக்யா நுணுக்கமான, கலாச்சார மற்றும் பாரம்பரிய வடிவமைப்புகளின் மிக நேர்த்தியான கலவையாகும். இது நவீன உணர்வுகளுடன் கைவினைத்திறனுக்கு புதிய உத்வேகத்தை அளிக்கிறது. இந்த நகைத் தொகுப்பு, கிருஷ்ணரின் வாழ்க்கை மற்றும் கிருஷ்ணர் தொடர்பான சிறு ஓவியங்களின் மூலம் கதைகளை சித்தரிக்கும் பிச்வாய் வகை ஓவியங்களின் நுணுக்கமான ஓவியங்களில் ஈர்க்கப்பட்டு மிகவும் அழகாக வடிவமைக்கப்பட்டு உள்ளது. அத்துடன் முகலாய, ராஜஸ்தானி மற்றும் பஹாரி கட்டடங்களின் குறிப்பிடத்தக்க பாரம்பரிய ஓவியங்களான மினியேச்சர் வகை ஓவியங்களில் ஈர்க்கப்பட்டு அதை அடிப்படையாகக் கொண்டும் இந்த பிரத்தியேகமாக நகைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அழகான தாவரங்கள், நுணுக்கமான வடிவமைப்புகளும் கூட துல்லிய வெளிப்படும் வகையில் முழுமையான அலங்காரம், நுணுக்கமான ஸ்ட்ரோக்குகள், தாமரை விதைகள், துடிப்பான வண்ணங்கள் மற்றும் ஓவியங்களின் மீது ஈர்ப்பை உருவாக்கும் அலங்கரிக்கப்பட்ட அம்சகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அற்புதமான வடிவமைப்புகள் இந்த நேர்த்தியான நகைத் தொகுப்பில் உள்ளன. ஒவ்வொரு நகையும் பிரோய் எனாமல் போன்ற பல்வேறு நுட்பங்களைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது. இது இந்த நகைகள் மற்றும் தங்கம் மற்றும் குந்தன் நுட்பங்களுக்கு நவீன கவர்ச்சியின் அழகைச் சேர்க்கிறது. இந்த நுட்பங்களைப் பயன்படுத்துவது கம்பீரத்தையும் தனிச்சிறப்பையும் சேர்க்கிறது. கைவினைஞர்களின் அற்புதப் படைப்புகள் நகைக் கலைஞரின் கற்பனையை கலை வண்ணமாக்கிப் பெருமையுடன் பிரதிபலிக்கின்றன.




அத்துடன் அலங்காரத்தின் ஒரு உருவகமாகவும் இவை இருக்கின்றன. இது பண்டிகை விடுமுறைக் காலத்திற்கான நகை அலங்காரத்தின் மகத்துவத்தை அதிகரிக்கிறது.

தீபாவளிப் பண்டிகையின் உற்சாகத்தின்போது, நகைகளினால் உண்டாகும் மகிழ்ச்சியும், உற்சாகமும், அழகும் இல்லாமல் எந்த கொண்டாட்டமும் நிறைவடையாது. நகைகள் பண்டிகை மனிநிலைக்கு மேலும் மகிழ்ச்சியைச் சேர்க்கும். தனிஷ்க்-கின் அலேக்யா நகைத் தொகுப்பு பாரம்பரிய இந்திய நகைகளுக்கு மேலும் அழகு சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

அலேக்யா நகைத் தொகுப்பின் நகைத் தயாரிப்புகளுக்கான விலை ரூ.70,000 முதல் தொடங்குகிறது. பிரத்தியேக அலேக்யா தயாரிப்புகளைப் பற்றித் தெரிந்து கொள்ள www.Tanishq.co.in என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

# டிசிபி சுரக்ஷா நிலையான வைப்புடன், இந்த பண்டிகை காலம், பணம் மற்றும் வாழ்க்கை இரண்டையும் மதிப்பதாக உறுதியளிக்கிறது

சென்னை, அக்டோபர் 20 2022: பண்டிகைக் காலத்தில் வங்கிகள் எவ்வாறு சுவையையும் மகிழ்ச்சியையும் சேர்க்கின்றன? டிசிபி வங்கி கவர்ச்சிகரமான டிசிபி நிலையான வைப்பு வட்டி விகிதங்கள் மற்றும் டிசிபி சுரக்ஷா நிலையான வைப்பு உடன் தவிர்க்க முடியாத வழங்கல்களைக் கொண்டுள்ளது. இந்த இரண்டு வழங்கல்களும் வாடிக்கையாளர்கள் அதிகம் சேமிக்கவும் அதிகம் சம்பாதிக்கவும் உதவுகிறது.

டிசிபி சுரக்ஷா எஃப்டி மீண்டும் வருகிறது! சுரக்ஷா எஃப்டி உடன் இலவசமாக வழங்கப்படும் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்ட ஆயுள் காப்பீட்டுத் திட்டம் வாடிக்கையாளர்களுக்கு ஒரு நிகரற்ற நன்மையாகும். ஒரு நிலையான 3 ஆண்டு எஃப்டி திட்டமான டிசிபி சுரக்ஷா எஃப்டி, வைப்பாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் அல்லது அன்புக்குரியவர்களுக்கு சேமிப்பு மற்றும் பாதுகாப்பின் சிறந்த கலவையை வழங்குகிறது.

சுரக்ஷா காப்பீடு இல்லாமல் வழக்கமான பிக்சட் டெபாசிட்டும் ஆவலைத் தூண்டுவதாக உள்ளது. 700 நாட்கள் அல்லது 3 ஆண்டுகளுக்கான நிலையான வைப்புத்தொகைக்கு ஆண்டுக்கு கவர்ச்சிகரமான 7.10% வட்டி விகிதத்தை இந்த வங்கி வழங்குகிறது, இது ஆண்டுதோறும், ஆண்டுக்கு 7.49% அல்லது ஆண்டுக்கு 7.84% முறையே வழங்குகிறது. மூத்த குடிமக்கள் அதே காலத்திற்கு, ஆண்டுக்கு 7.60% மற்றும் வருவாய் முறையே ஆண்டுக்கு 8.05% மற்றும் ஆண்டுக்கு 8.45% ஈட்டுகிறார்கள்.

5 வருட நிலையான வைப்புத்தொகையின் நீண்ட காலத்திற்கு, ஆண்டுக்கு 7% இதற்கு ஆண்டு வருவாய் ஆண்டுக்கு 8.43% ஆண்டுக்கு % மூத்த குடிமக்கள் ஆண்டுக்கு 7.50% அதாவது ஆண்டுக்கு 9.14% வருடாந்திர வருவாய் ஈட்டுகிறார்கள் ஒரு 10 வருட நிலையான வைப்பும் கிடைக்கும்!

கவர்ச்சிகரமான பலன் - டிசிபி சுரக்ஷா, ஸ்மார்ட் மற்றும் ‘சுரக்ஷித்’ முதலீடாக அதை வேறுபடுத்தும் இரண்டு தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ளது. முதலாவதாக , இது, மூன்றாண்டு வைப்பில், அதிக வட்டி விகிதமான ஆண்டுக்கு 7.10% வழங்குகிறது. இரண்டாவதாக, சுரக்ஷா எஃப்டி தொகைக்கு சமமான இலவச ஆயுள் காப்பீடு அல்லது சுரக்ஷா எஃப்டி தொகை 10 லட்ச ரூபாய்க்கு அதிகமாக இருந்தால் 10 லட்சம் ரூபாய் வரை இலவச ஆயுள் காப்பீடு வழங்குகிறது. இந்த டிசிபி சுரக்ஷா எஃப்டி வாடிக்கையாளர் காப்பீட்டுத் தொகைக்கான பிரீமியத்தைச் செலுத்துவதில்லை. மேலும், இந்த ஆயுள் காப்பீட்டை அனுபவிக்க மருத்துவ பரிசோதனை தேவையில்லை.

குடியிருப்பாளர், என்ஆர்இ மற்றும் என்ஆர்ஓ நிலையான வைப்புத்தொகைக்கான கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள்

டிசிபி சுரக்ஷா பிக்சட் டெபாசிட் இன் முக்கிய அம்சங்கள்:

- நிலையான வைப்புத்தொகைக்கு கவர்ச்சிகரமான வட்டி விகிதம்
- டிசிபி சுரக்ஷா எஃப்டி ஆனது, 36 மாத காலத்திற்கு ஆயுள் காப்பீடு வழங்குகிறது
- முதன்மை விண்ணப்பதாரரின் பெயரில் உள்ள அனைத்து டிசிபி சுரக்ஷா நிலையான வைப்புகளிலும், அதிகபட்ச ஆயுள் காப்பீடு, இந்திய ரூபாய் 10 லட்சம் வரை
- 18 வயது முதல் டெபாசிட் செய்பவர் 55 வயது எட்டும் வரை இந்த காப்பீடு செல்லுபடியாகும்
- வருங்கால வைப்பாளர்கள் பான், நியமனம் மற்றும் மின்னஞ்சல் ஐடியை வழங்குவதன் மூலம் எஃப்டி இல் முதலீடு செய்யலாம்.

என்.ஆர்.ஐ களும் சுரக்ஷா பலனைத் தவறவிடமாட்டார்கள்!

மேலும், டிசிபி என்ஆர்ஐ சுரக்ஷா பிக்சட் டெபாசிட், என்ஆர்ஐ களுக்கு கவர்ச்சிகரமான வருமானம் மற்றும் நிலையான வைப்புத்தொகையின் தொகைக்கு ஏற்ப இலவச ஆயுள் காப்பீட்டை வழங்குகிறது.

டிசிபி என்ஆர்ஐ சுரக்ஷா பிக்சட் டெபாசிட்கள், நான் ரெசிடெண்ட் எக்ஸ்டெர்னல், நான் ரெசிடெண்ட் ஆர்டினரி ஆகியவற்றில், இந்திய ரூபாயில் கிடைக்கும்.

டிசிபி என்ஆர்ஐ சுரக்ஷா எஃப் சி என் ஆர் வைப்புத்தொகையை முன்பதிவு செய்ய விரும்பும் என்ஆர்ஐகள், யு எஸ் டி,எ யு டி,சி எ டி,யூரோ அல்லது ஜி பி பி போன்ற வெளிநாட்டு நாணயங்களில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி அவ்வாறு செய்யலாம்.

வாடிக்கையாளர்கள் மத்தியில் டிசிபி சுரக்ஷா எஃப்டி இன் நட்சத்திர நற்பெயரைக் கருத்தில் கொண்டு, டிசிபி சுரக்ஷா எஃப்டி இன் இந்த மறு அறிமுகம் ஆனது, பாதுகாப்பு மற்றும் உறுதியான வருமானத்தை விரும்புவோருக்கு, ஒரு சிறந்த முதலீட்டுத் தேர்வாகும்.

# ஸ்கூல்நெட், தங்கள் முதன்மைத் தயாரிப்பான ஜீனியோவில் சந்தாதாரராகும் மாணவர்களுக்கு குறியீட்டு (கோடிங்) திறன்களை அடைவதை விரிவுபடுத்துவதற்கு குவி உடன் கூட்டு சேருகிறது

சென்னை, அக்டோபர் 20 2022: ஒரு தனித்துவமான, புதுமையான மற்றும் முன்னணி எட் டெக் நிறுவனமான ஸ்கூல்நெட் இந்தியா லிமிடெடும் மற்றும் பாரம்பரிய எட் டெக் ஆன குவி கீக் நெட்வொர்க்ஸ் லிமிடெடும் ஜீனியோ வில் பதிவு செய்யும் அனைத்து மாணவர்களுக்கும் குறியீட்டு திறன்களை வழங்குவதற்காக, கூட்டு சேருகிறது.

ஐஐடி-எம் & ஐஐஎம்-ஏ உருவாக்கப்பட்ட எட்டெக் தொடக்க நிறுவனமான குவி, 17 லட்சத்திற்கும் மேற்பட்ட கற்றவர்களின் வாழ்க்கையைத் தொட்ட இந்தியாவின் முதல் வட்டார மொழித் தளமாகும். ஹாக்கர் கிட் என்பது குவி இன் சிறப்பாக நிர்வகிக்கப்பட்ட குழந்தைகளுக்கான கேமிஃபைட் குறியீட்டு தளமாகும், இது 6 ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு அதிநவீன தொழில்நுட்பங்களில் அத்தியாவசிய அறிவை வழங்குவதற்குத் தனித்துவமான கல்விமுறைகளைப் பின்பற்றுகிறது. ஹாக்கர் கிட் பல்வேறு அளவிலான நிரலாக்கக் (ப்ரோக்ராமிங்) கருத்துகளுடன் கூடிய சவாலான விளையாட்டு நிலைகளை வழங்குகிறது. ஸ்கூல்நெட் - குவி கூட்டுழைப்பு, அனைத்து ஸ்கூல்நெட் கற்பவர்கள் பார்வைக்கும், மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் நிரலாக்கக் (ப்ரோக்ராமிங்) கல்வியின் கதவுகளைத் திறக்கும். மறுபுறம், நொய்டாவை தளமாகக் கொண்ட ஸ்கூல்நெட் இந்தியா, 100000 பள்ளிகளுக்கு மேல் அதன் தனித்துவமான டிஜிட்டல் வகுப்பறை தீர்வுகளுடன் மாணவர்களுக்கான தடையற்ற, பள்ளிக்குப் பிறகு கற்றல் மூலம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, இந்த ஒத்துழைப்பை ஒரு சிறந்த தொழில்நுட்ப எதிர்காலத்திற்கான குறிப்பிடத்தக்க படியாக பார்க்கிறது. ஸ்கூல்நெட் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதிலும், கல்வியை சமநிலைபடுத்துவதிலும், அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை வழங்குவதிலும் நம்பிக்கை கொண்டுள்ளது. குவி உடனான கூட்டாண்மை என்பது அனைவருக்கும் எட்டக்கூடிய வகையில் தரமான டிஜிட்டல் கற்றலை வழங்குவதில் ஸ்கூல்நெட் எடுத்த மற்றொரு முயற்சியாகும். பள்ளிகள் மற்றும் ஆசிரியர்களுக்கு சரியான தொழில்நுட்பத்தை வழங்குவதில் இந்த கூட்டாண்மை, அவர்களின் முயற்சிகளுக்கு அதிகம் சேர்க்கும்.

இந்த கூட்டுழைப்பு குவி & ஸ்கூல்நெட் இரண்டும், மாணவர்கள் மேம்பட்ட நிரலாக்க (ப்ரோக்ராமிங்) அறிவுடன் எதிர்காலத்திற்குத் தயாராக இருக்க வேண்டும் என்றும், அதிநவீன தொழில்நுட்ப மேம்பாடுகளுடன் அவர்களைத் தொடர்ந்து வைத்திருக்கவும் எதிர்பார்க்கிறது.

இந்த கூட்டாண்மை பற்றி கருத்து தெரிவிக்கையில், ஸ்கூல்நெட்டின் எம்.டி மற்றும் சிஈஓ திரு ஆர்சிஎம் ரெட்டி கூறுகிறார், "ஒவ்வொரு குழந்தையும் வித்தியாசமாக கற்றுக்கொள்கிறது என்று நாங்கள் நம்புகிறோம், எனவே கற்றல் பயணத்தின் ஒவ்வொரு அடியிலும் தனிப்பயனாக்கம் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. இவ்வாறு, மாணவர்கள் சிறப்பாகக் கற்க உதவும் தனித்துவமான பாட வாரியான கல்வியியல் அணுகுமுறையை ஜீனியோ பின்பற்றுகிறது. இந்த கூட்டாண்மை மூலம் மாணவர்கள் கேமிஃபிகேஷன் மூலம் குறியீட்டு (கோடிங்) முறையைக் கற்றுக்கொள்வதற்கும் சிறப்பாக ஈடுபடுவதற்கும் வாய்ப்பைப் பெறுவார்கள்." என்று கூறினார்.

ஸ்கூல்நெட் மற்றும் குவி இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் குவி இன் சிஈஓ & நிறுவனர் திரு அருண் பிரகாஷ் எம், குவி இன் இணை நிறுவனர் திரு பாலமுருகன் எஸ்பி மற்றும் குவி இன் வளர்ச்சி பிரிவு தலைவர் திரு பிரவீன் குமார் ஆகியோர் முன்னிலையில் கையெழுத்தானது. அவர்களுடன் ஸ்கூல்நெட்டின் தலைமை டிஜிட்டல் அதிகாரி திரு ஷோரி சாட்டர்ஜியும் இருந்தார்.

குவி இன் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திரு அருண் பிரகாஷ் எம், தனது கருத்துக்களை வெளிப்படுத்தி அவர் கூறும்பொழுது "இந்த கூட்டாண்மை மற்றும் ஜெனியோவுடன் ஹாக்கர் கிட் இன் இந்த ஒருங்கிணைப்பு மூலம், சிறந்த குறியீட்டு (கோடிங்) முறை மற்றும் மேம்பட்ட தொழில்நுட்ப திறன்களை அங்குள்ள அதிகபட்ச எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு வழங்க நாங்கள் விரும்புகிறோம். இந்த ஒத்துழைப்புடன், இந்தியாவின் எதிர்காலத்தை, தொழில்நுட்பக் கண்ணோட்டத்தில் பிரகாசமான மற்றும் முற்போக்கான கல்வியுடன் மறுவரையறை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்." என்று கூறினார்.

இந்த எண்ணங்களைச் சேர்த்து, குவி இன் வளர்ச்சிப் பிரிவுத் தலைவர் திரு பிரவீன் குமார், “இந்தக் கூட்டாண்மை மிகப்பெரிய ஒன்றை வெளிக்கொண்டுவரும்! குறியீட்டு (கோடிங்) முறை திறமையை கொண்டிருப்பது, மிகவும் சிறப்பானது, மேலும் இந்த முயற்சியானது, எதிர்கால முன்னோடிகளான அனைத்து குழந்தைகளுக்கும், முதன்மையான அணுகளுடன் அனைவரின் வாழ்க்கையையும் தொடும். ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் குழந்தைக்காக எதிர்நோக்கும் ஒரு பிராண்டான ஹாக்கர் கிட் ஐ நாங்கள் எதிர்பார்க்கிறோம் !" என்று கூறினார்.

இந்த எண்ணங்களை பூர்த்தி செய்யும் வகையில், ஸ்கூல்நெட்டின் தலைமை டிஜிட்டல் அதிகாரி திரு ஷோரி சாட்டர்ஜி, “நாங்கள் எதிர்பார்த்தபடி, புவியில் முழுவதும் உள்ள மாணவர்களுக்கு குறியீட்டு (கோடிங்) முறை கண்டிப்பாகத் தெரிந்திருக்க வேண்டிய திறமையாக இருக்கும், மேலும் இந்த கூட்டுறவின் மூலம் ஜீனியோவில் உள்ள ஒவ்வொரு மாணவரும் பள்ளிப் பாடத்திட்டத்திற்கு ஏற்ப குறியீட்டு முறையைக் (கோடிங்) கற்றுக்கொள்வார்கள்." என்று கூறினார்.